1987 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற 21 பவர் லூம் காம்ப்ளக்ஸ் இருக்கின்றன, அவற்றைப் பொறுத்தவரையில் எல்லாம் கைத்தறி நெசவாளர்களைக் கொண்ட சங்கங்கள் அமைந்து அவர்களுக்கு பயன்தரத்தக்க வகையில்தான் நாம் ஆரம்பித்திருக்கிறோம். இப்போது 250 ரூபாய் கட்டினால் ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிஃபிகேட் தரப்படுகிறது. இதிலே கைத்தறி நெசவாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உதவிகள் செய்யப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கி வருகிற விசைத்தறிக் கூடங்களில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துகொண்டிருக்கிறார்கள் தற்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படுகிறது. அதேபோல் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படுகிறது. ஆகவே, இப்படி விசைத்தறிக் கூடங்களில் தேங்கிக் கிடக்கிற அந்தத் துணிகளை பள்ளி மாணவர்களுக்குச் சீருடையாக வழங்கவும், போக்குவரத்துக் கழகங்களில் அவற்றை வாங்கவும் அரசு ஆணையிடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அத்தோடு நூல்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலும் பல விசைத்தறிக் கூடங்கள் இன்றைக்கு மூடப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே விசைத்தறிக் கூடங்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் நூல் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு இப்பொழுது சீருடைகள் போன்றவற்றிற்கு கோ-ஆப்டெக்ஸ் மூலமாக துணிகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. நூல் தமிழகத்தில் கிடைப்பதில்லை என்ற பிரச்சனை இப்போது இல்லை. பிரச்னை ஏற்படுகிறபோது அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கூட்டுறவு வங்கிகளுக்கு பிரைமரி கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் வட்டித் தொகை.

74—(*வினா எண். 11920 திரு. மா. **மணிமாறன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளுக்கு பிரைமரி கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்க வேண்டிய வட்டித் தொகை செலுத்த அரசு உதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியான 7.5 சதவிகிதத்திற்கு நடைமுறை மூலதனக் கடன் பெறுகின்றன. அதனால் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஏற்படும் இழப்பினை (சேவைத் தொகை) ஈடு செய்யும் பொருட்டு தமிழக அரசு 3 சதவிகிதம் மானியமாக மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கி வருகிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற, ஈடு செய்கிற வட்டித் தொகையைக் கணக்கிடுகிற போது சில கூட்டுறவுச் சங்கங்கள் தவறான வழியில் பதிவு செய்து, தவறான கணக்குகள் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட சங்கங்களை ஆய்வு செய்து தடை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி சங்கங்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்திலேதான், வங்கிகள் 10 சதவீதத்திலே கடன் கொடுக்கிறபோது, அரசு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 7.5 சதவீதத்தில் கடன் கொடுத்து, அதனால் வங்கிகளுக்கு ஏற்படுகிற இழப்பை ஈடு செய்ய 3 சதவீதம் வட்டியை மானியமாகக் கொடுத்து நெசவாளர்களுக்கு உதவி வருகிறது. பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள் தவறு செய்வதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் தெரிந்து குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

ஆற்காடு, திமிரி ஒன்றியங்களில் சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டுதல்.

75—(*வினா எண். 9337) திரு. த. பழனி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு திமிரி ஒன்றியங்களில் எத்தனை இடங்களில் சத்துணவுக் கூடங்களுக்கு இந்த ஆண்டு கட்டிடம் கட்டப்படும்?

(ஆ) எத்தனை சத்துணவுக் கூடங்களில் திருக்குறள் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிறார்கள்?

(இ) அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆற்காடு ஒன்றியத்தில் 3 இடங்களிலும், திமிரி ஒன்றியத்தில் 4 இடங்களிலும் இந்த ஆண்டு சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்டித் தரப்படும்.